<u>**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**</u>

O.S.No.121/2023 தேதி- 20.01.2026

(P.W.1) - ஹெலன்சுனிதா

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. மாதம் தோறும் நான் கட்ட வேண்டிய ரூபாய் 3000/- தொகையை குழுவில் செலுத்தி குழுவின் மூலம் தான் 4 ஆம் பிரதிவாதியான சோஷைட்டிக்கு பணம் செலுத்தப்படும் என்றால் சரிதான். மேற்சொன்ன குழுவின் மூலம் செலுத்தப்படும் பணம் எங்கள் குழு பணம் செலுத்தியதாக தான் பிரதிபளிக்கப்படும் என்றால் சரிதான். நான் கட்டிய பணம் ரூ.12000/- யை 4 ஆம் பிரதிவாதியிடம் கேட்க எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என் பிராதில் சொல்லியுள்ளது போல் விவசாயகடன் ஏதும் பெறவில்லை என்றாலும் நான் கட்டிய தொகையை திரும்பபெற எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. கடன் தொகை தள்ளுபடி செய்யப்பட்டதால் திரும்ப பெற தகுதியுடையவர் ஆவேன். பொதுவாக ஒரு குழுவின் உறுப்பினருக்கு கடன் தொகை தள்ளுபடி செய்யப்பட்டால் அது அந்த குழுவின் கடனை தள்ளுபடி செய்யப்பட்டதாக தான் பொருள் என்றால் சரியல்ல. தள்ளுபடி தொகையான ரூ.3,48,320/- என்ற தொகை போக மீதமுள்ள அசல் மற்றும் அதற்கான வட்டியை செலுத்த ஜீசஸ் மகளிர் சுய குழுவிற்கு கடமை உள்ளது என்றால் சரியல்ல. 11.2.2023 அன்று ஜீசஸ் மகளிர் சுய குழுவில் சிறப்பு தீர்மான கூட்டம் நடத்தப்பட்டது என்றாலும் ரூ.50,000/- கடன் பெற்ற நபரிடம் இருந்து ரூ.29,100/- யை சேமிப்பு கணக்கில் இருந்தும் வட்டியில் இருந்தும் பிடித்தம் செய்து கட்டவேண்டும் என்று தீர்மானம் போடப்பட்டது என்றால் சரியல்ல.

2. மேற்சொன்னவாறு தான் அசல் மற்றும் வட்டி தொகை செலுத்தப்ட்டது என்றால் சரியல்ல. 11.2.2023 அன்று சிறப்பு கூட்டத்திற்கு அலைப்பேசி மூலம் எனக்கு தகவல் தெரிவிக்கப்பட்டும் மேற்சொன்ன கூட்டத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. தீர்மான கூட்டத்திற்கு சென்றேன். மேற்சொன்னவாறு கூட்டத்திற்கு சென்று இருந்தால் வருகை பதிவேட்டில் கையொப்பம் இருக்கும் என்றால் அதுபற்றி தெரியாது. 19.2.2023 அன்று நடைபெற்ற கூட்டத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தினமும் நான் கூட்டத்திற்கு சென்றேன். 2.4.2023 அன்று தபால் மூலம் தீர்மான கூட்டத்திற்கு எனக்கு தகவல் 29.3.2023 அன்று வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு தபால் ஏதும் வழங்கப்படவில்லை. 13.4.2023 அன்று நான் வழக்கறிஞர் மூலம் ஒரு அறிவிப்பு ஜீசஸ் மகளிர் சுய குழுவிற்கு அனுப்பினேன் என்றால் சரிதான்.

1.06.2023 அன்று அதற்கு பதில் அறிவிப்பு வழக்கறிஞர் ஜான்சன் மூலம் வழங்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. 31.3.2022 அன்று ரூ.50,000/- சேமிப்பு கணக்கில் இருந்து கடன் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

3. 5.2.2023 அன்று ரூ.42,000/- கடன் தொகையை மட்டும் தான் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல, முழு தொகையும் செலுத்தியுள்ளேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணமான பாஸ் புக்கில் ரூ.7500/- கடன் தொகை செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 31.3.2022 முதல் 5.2.2023 வரை ரூ.50,000/- க்கு வட்டியாக ரூ.3900/- கட்டவேண்டும் என்றாலும், ரூ.11,400/- தொகையை செலுத்த நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் சேமிப்பு கணக்கில் இருந்தும், வட்டியில் இருந்தும் ரூ.40,500/- யை 4ஆம் பிரதிவாதியான சொஷைட்டிக்கு செலுத்தப்பட்டது என்றால் சரிதான் மேற்சொன்ன தொகையை குழுவில் என்னிடம் எந்தவித முன் அனுமதி பெறமால் அவர்காளகவே 4ஆம் பிரதிவாதிக்கு செலுத்திவிட்டார்கள். எனக்கு கிடைக்கப்படவேண்டிய ரூ.26,750/- 4ஆம் பிரதிவாதியான சொசைட்டியில் வைக்கப்பட்டுள்ளது என்றாலும் அதை எப்போது வேண்டுமானலும் நான் பெற்றுகொள்ளாலம் என்றால் சரியல்ல. மேற்சொன்ன தொகையை குழுவில் நடத்தப்பட்ட சிறப்பு தீர்மான கூட்டத்தின் அடிப்படையில் தான் செலுத்தப்பட்டது என்றாலும் நான் மேற்சொன்ன சிறப்பு கூட்டத்திற்கு செல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**4** ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரனை

1. ஜீசஸ் மகளிர் சுய குழுவில் நான் 14 வது உறுப்பினர் என்றால் சரிதான். நான் விவசாய கடனுக்குக்காக 4 ஆம் பிரதிவாதியிடம் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். 4ஆம் பிரதிவாதி ஜீசஸ் மகளிர் சுய குழுவிற்கு தான் கடன் தொகை கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன ஜீசஸ் மகளிர் சுய குழுவில் ஒரு நபர் பணம் செலுத்தினாலும் அது அந்த ஜீசஸ் மகளிர் சுய குழுவில் இருந்து பணம் செலுத்தப்பட்டதாக தான் எடுத்துக்கொள்ளப்படும் என்றால் சரிதான். ஒரு உறுப்பினர் பணம் கட்டவில்லை என்றாலும் குழுவில் உள்ள அனைத்து உறுப்பினருக்கும் அது சாரும் என்றால் சரிதான். நான் விவசாய கடன் கேட்டகாததால் 4ஆம் பிரதிவாதியிடம் இருந்து எந்த பணமும் திரும்ப பெற தகுதியுடையவர் இல்லை என்றால் சரியல்ல. கடன் தொகை

தள்ளுபடி செய்யப்பட்டது. நான் என் பிராதில் ரூ.50,000/- விவசாய கடன் பெற்றதாக சொல்லியுள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4 ஆம் பிரதிவாதியிடம் இருந்து எனக்கு எவ்வித தொகையையும் திரும்பபெற உரிமையில்லை என்றால் சரியல்ல.